244 [1990 மே 5

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது அரசு இங்கே வந்ததற்குப் பிறகு இந்த வேலைகள் துரிதப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இதே மன்றத்திலே இந்த குடிநீர்த் திட்டத்தைப் பற்றி பல ஆண்டுகள் பேசியிருக்கிறோம். இந்த மஞ்சுஸ்ரீபிளான்டேசனில் பைப் போடுவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. பிர்லா தோட்டங்கள் என்பது எல்லாம் பழைய காலத்துக் கதை. அதெல்லாம் முடிந்து இப்போது நம்முடைய அரசு வந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகியும் இந்த வேலைகள் துரிதமாகச் செய்வதற்கு அங்கே கீழே இருக்கிற பொறுப்பில் இருக்கும்படியான அதிகாரிகள் போதிய தீவிரம் காட்டாமல் இருந்து வருகிறார்கள் என்று பல செய்திகள் எங்களுக்கு வருகின்றன. மேலும் இப்போதுகூட கீழே பதிக்கப்பெற வேண்டிய குழாய்கள் பெரும் குழாய்கள் பம்பாயில் ஒரு கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்து அது கூட சரியான முறையில் காலத்தில் வந்து சேரவில்லை என்று கூறுகிறார்கள். இவைகளை எல்லாம் தாண்டி, ஓவர்கம் பண்ணி இந்த குறிப்பிட்டக் காலத்திற்குள் திட்டவட்டமான காலத்திற்குள் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

10-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடனேயே அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதிக்கின்றபோது எடுத்துச் சொன்னார்கள். அங்கே குழாய்களெல்லாம் 1990 மார்ச் மாதத்திலே வாங்கப்பட்டு விட்டன. ஆனால் அந்தக் குழாய்களைப் பதிப்பதற்கான டெண்டர் விடப்பட்டபோதுதான் முதல் டெண்டரிலே யாரும் முன்வராத காரணத்தால், இரண்டாவதாக அங்கே டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அதற்காகத் தான் நான் உறுப்பினர் அவர்களிடம் சொன்னேன், நானே கூட நேரிலே சென்று அந்தப் பணிகளை மேற்பார்வையிட இருக்கிறேன். என்று, விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு

திரு மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின், பொதுப்பணித் துறை

1990 மே 5] [திரு. மு. இராமநாதன்]

கட்டிடங்கள் குறித்த நான்காவது அறிக்கையையும் கூட்டுறவு துறை குறித்த ஐந்தாவது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் மூலம் 1989-90ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 43 முதல் 45 வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 49 மற்றும் 50-ஆவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன் போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அவைக்கு அளிக்கப்படுகின்றன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதி கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்தசட்ட முன்வடிவு 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொது விற்பனை வரி இரண்டாவதுதிருத்தசட்ட முன்வடிவு. 1990,

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.